[1972 ஆகஸ்ட் 22

திருமதி த. ந. அனந்தநாயகி : ஏற்கெனவே ஒரு வருஷம் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பயிற்சி பெறுகின்றவர்களுக்கு வேலை வாய்ப்பு உண்டா? அல்லது சொந்த நிலங்களில் பயிரிடுவதற்குத்தான் பயிற்சி அளிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சில பேர் சொந்த நிலங்களையும் பார்த்துக்கொள்கிறார்கள். சில பேருக்கு வேலையும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Pesticides for tobacco and turmeric.

*** 260. Thiru N. K. Palanisamy. Will the Hon. the Minister for Agriculture be pleased to State whether any specific Pesticides have been invented for tobacco and turmeric?**

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : ஏற்கனவே டையாதீன் என்ற ஒரு மருந்து இருந்தது. ஆனால் இப்பொழுது சப்ளை இல்லை. அதாவது, புகையிலை புழுக்கள் அழித்துவிடுவதால் ஏராளமான விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அதைத் தடுப்பதற்கு எந்தவிதமான மருந்தும் இல்லை. ஆகவே, ரிசர்ச் டிபார்ட்மெண்ட் மூலமாக, இதைத் தடுக்க தனியாக மருந்து கண்டுபிடிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : புகையிலை, மஞ்சளுக்கென்று தனியாக பூச்சி மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இரண்டொரு மருந்துகளை வைத்து பயிர்களை பாதுகாக்கிறார்கள். எங்கெங்கு பூச்சி விழுந்திருக்கின்றதோ அங்கெல்லாம் இந்த மருந்துகளை உபயோகித்து பயிர் செய்கிறார்கள் என்று உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக, பெஸ்டிசைட்ஸ், வீடிசைட்ஸ் சம்பந்தமான ஆராய்ச்சிகள் மிகவும் மந்தமாகிக்கொண்டிருக்கின்றன. அதை நல்ல முறையிலே ஏன் செய்யவில்லை யென்று அரசாங்க அதிகாரிகளைக் கேட்டால் வெளிநாட்டிலிருந்துதான் மருந்துகளை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி தரவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, இதற்காக மத்திய அரசாங்கத்தோடு நம்முடைய அரசாங்கம் போரிடுமா? மந்தமாக இருக்கும் பெஸ்டிசைட்ஸ், வீடிசைட்ஸ் ஆராய்ச்சிகளை தீவிரப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மத்திய அரசோடு போராடுவது பற்றிய நீண்ட பலவிவாதங்கள் எல்லாம் அங்கத்தினருக்குத் தெரியும். ஆகவே இது பற்றிக் கேட்டிருந்தால்கூட நான் சொல்லத் தேவையில்லையென்று கருதுகிறேன். பயிர்கள் அழியாத வண்ணம் இருக்கிற பூச்சி மருந்துகளை வைத்து, தடுப்பு நடவடிக்கைகளை எங்கெங்கு

எடுக்கவேண்டுமோ அங்கெல்லாம் விவசாய இலாகா அதிகாரிகள் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். என்றாலும் சில ரா மெடீயல்ஸ் வரவேண்டி யிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கிறோம்.

THIRU B. VENKATASWAMY : Sir, 'powdery mildew' is a dangerous disease affecting tobacco and powdery sulpher is most essential for controlling it. May I know from the Hon. Minister if sulpher will be supplied to all the depots wherever necessary for use on tobacco in our State ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : என்டோசைபின் போன்ற பூச்சிகொல்லி மருந்தை ஏக்கருக்கு 250 மில்லிகிராம் அளவுக்குப் பயன்படுத்தினால் இந்தக் கம்பளிப் பூச்சிகளும் மற்ற செடிப்பேன் பூச்சி களும் அடியோடு ஒழிக்கப்படும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மற்ற மருந்துகளைச் சேர்த்தால் புகையிலை வீணாகிறது என்ற காரணத்தால் மற்றவைகள் எல்லாம் தெளிக்கப்படுவதில்லை.

சலவைத் துறைகள்.

*261. வினா.—திரு. தி. ஒ. பெரியசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சலவையாளர்களுக்கு ஒவ்வொரு நகரத்திலும் சலவைத் துறைகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை எத்தனை சலவைத்துறைகள் எந்தெந்த நகரங்களில் கட்டப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நகராட்சிகளுக்கும், பேரூராட்சி களுக்கும் சலவைத்துறை கட்ட பொருளாதார உதவியளிக்கும் திட்டத்தின் கீழ் நகராட்சி இயக்குநர், ஊரக வளர்ச்சி இயக்குநர் அனுப்பிய செயற் குறிப்புகளை ஆய்ந்து திருப்பூர், சேலம், பரமகுடி நகராட்சிகளுக்கும், சின்னாளம்பட்டி (மதுரை மாவட்டம்) தேவதானபட்டி (மதுரை மாவட்டம்), ஸ்ரீவைகுண்டம் (திருநெல்வேலி மாவட்டம்) திருத்தாங்கல் (இராமநாத புரம் மாவட்டம்) அரியலூர் (திருச்சி மாவட்டம்) அன்னவாசல் (திருச்சி மாவட்டம்), பேராவூரணி (தஞ்சாவூர் மாவட்டம்) ஒரத்தநாடு (தஞ்சாவூர் மாவட்டம்) சித்தியங் கோட்டை (மதுரை மாவட்டம்), இராமேஸ்வரம் (இராமநாதபுரம் மாவட்டம்) பேரூராட்சிகளுக்கும் உதவி அளித்துள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சென்னை நகரிலேயே இருக்கின்ற வற்றைப் பற்றி நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அடையாறிலே ஒரு டோபிகானா கட்டிக்கொண்டிருக் கிறார்கள். சைதாப்பேட்டையிலே இருக்கிற டோபிகானா சரியாக இயங்க வில்லை. அமைச்சரவர்கள் சென்னையிலேயுள்ள டோபிகானாக்களைப் பார்வையிடுவதற்கு புரோகிராம் போடுவார்களா ? அப்படிப் போகும்போது தொகுதி எம்.எல்.ஏ.-வை அழைத்துச் சென்றால் கஷ்டங்களைச் சொல் வதற்கு வசதியாக இருக்கும் என்பதைக் கவனிப்பார்களா ?